Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389

National Tamil Daily — தேசிய தினசரி

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது தை 27 ஆம் நாள் றம்ழான் பிறை 13 (9-2-63) சனிக்கிழமை இதழ் 1

தபாற் பெட்டி எண் 49

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணடி விற்பனையாளரும்
45,மெயின்வீதி, : யாழ்ப்பாணம்

# நல்லூர் எம். பி. க்கு வெளியேற உத்தரவு!

## இலங்கரத்தின - நாகநாதன் நீண்ட வாக்குவாதம்

### நேற்றைய பார்லிமெண்டில் நடைபெற்ற சம்பவம்

கொழும்பு, சனி

இன்று பிற்பகல் ஜனப்பிரதிநிதிகள் சபை நிகழ்ச்சிகளின் போது நல்லூர் எம். பி. திரு. ஈ. எம். வி. நாகநாதனை சபையிலிருந்து வெளியேறும்படி உதவி சபா நாயகர் திரு. ஹியு பெர்னண்டோ உத்தரவிட்டார். திரு. நாகநாதனுக்கும், வர்த்தக உணவு அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தினவுக்குமிடையில் மூண்ட சொற்போர் ஈற்றில் கைகலப்பில் வரக்கூடிய நிலையை அடைந்தது. இதைத் தொடர்ந்தே திரு. நாகநாதன் வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டார்.

இன்று பிற்பகல் சபை கூடிய போது திரு. தகநாயகா தொடர்ந்து பேசினர். அவர் தனது பேச்சின் போது இறக்குமதித் தடைகளால், இலங்கை கள்ளக்கடத்தல்காரர்களுக்கும், கூறையாடுபவர்களுக்கும் ஒரு வேட்டை ஸ்தலமாக திகழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டார்.

திரு: நாகநாதன்: (இடையில் குறுக்கிட்டு) "இந்த நிலைக்கு உணவு வர்த்தக மந்திரி தான் பொறுப்பாளி நாட்டிற்கு பதில் சொல்லும் பொறுப்பு அவருக்கே உடையது"

திரு. பிலிப். குணவர்த்தன: ஆம். அவர்தான் நாட்டிற்குப்

(5-ம் பககம் பார்கக)

## நீதிமன்றத்தில் சாட்சி மயங்கி விழுந்தார்!

### ஜி. ஜி. யின் குறுக்கு விசாரணை

சாவகச்சேரி, வெள்ளி

சரசாலை இரட்டைக்கொலை வழக்கில் சாட்சியமளித்த காலஞ்சென்ற சரவணையின் மனைவி தெய்வானைப் பிள்ளையை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் குறுக்கு விசாரணை செய்தபோது அவர் நீதிமன்றத்தில் மயங்கிவிழுந்தார். இத்துடன் மேல்விசாரணை 15-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சரசாலை இரட்டைக் கொலை வழக்கு இன்று சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்தியலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது காலஞ்சென்ற சரவணையின் மனைவி தெய்வானை சாட்சியமளித்தார்.

1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ந் திகதி சரசாலையைச் சேர்ந்த சரவணையையும் சின்னத்தம்பியையும் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக அடேயிடத்தைச் சேர்ந்த மூத்தையா கணபதிப்பிள்ளை, பொன்னையா சுப்பிரமணியம், சின்னையா சுப்பிரமணியம், ஆறுமுகம் பொன்னையா ஆகியோர்மீது குற்றஞ்சாட்டிச் சாவகச்சேரிப் பொலிசார் இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

இவ்வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிரிகளின் சார்பில் திரு. சண்முகநாதன், திரு சுந்தரலிங்கத்தின் உதவியுடன் திருவாளர்கள் திரவியநாயகம், செல்லத்தம்பி, கனகசபை சிவகுரு ஆகியோரின் அனுசரணையுடன் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆஜரானர். வழக்காளி சார்பில் திரு. சாம் சபாபதி ஆஜரானர்.

5-ம் பக்கம் பார்க்க

## ஈராக்கில் திடீர் ராணுவ புரட்சி!

### பிரதமர் காசிம் படுகொலை?

பாக்தாத், பெப். 9

ஈராக்கில் ஜுனியர் ராணுவ அதிகாரிகள் திடீர்ப் புரட்சி நடத்தி, அரசாங்கத்தைக் கைப்பற்றி விட்டதாக பாக்தாத் ரேடியோ இன்று அறிவித்தது. பிரதம மந்திரி ஜெரனல் கரீம் காசிம் கொலை செய்யப்பட்டுவிட்டதாக அந்த ரேடியோ மேலும் அறிவித்தது.

ஜெனரல் காசிமின் இல்லம் அமைந்துள்ள பாதுகாப்பு மந்திரி காரியாலயத்தை விமானப்படை விமானங்கள் குண்டு போட்டு அழித்து விட்டதாகவும் ஜெனரல் காசிம் அப்போது கொல்லப்பட்டதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டது. ஆனல் புரட்சித் தலைவர்கள் அவரைக்கொலை செய்ய முயன்றதாக பாக்தாத் ரேடியே பின்பு அறிவித்தது.

ஜுனியர் அதிகாரிகள் திடீர் புரட்சி சபைத்தலைவராக கர்னல் அப்துல் கரீம் முஸ்தாபா நியமிக்கப் பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

விசாரணைக்கு உட்படும் பொருட்டு உயர்ராணுவ அதிகாரிகள் அனைவரையும் சரணடையும்படி தேசிய புரட்சி சபை எச்சரித்துள்ளது.

கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஜெனரல் கரீம் காசிம், அரசியல் உரிமையை நிறுத்தி வைத்ததாயும், மக்கள் முன்னேற்றத்தை தடுத்து வைத்ததாயும் தேசிய சபை அறிவித்தது.

வடக்கு ஈராக்கின் விமானத்தளத்திலுள்ள விமானப் படை, புரட்சி இயக்கத்தினருடன் சேர்ந்து கொண்டு விட்டதாயும் பாக்தாத் ரேடியோ கூறியது.

வெளிநாட்டாரின் உயிருக்கும், உடமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. அந்நிய விமானங்களுக்கு பாக்தாத் விமானத்தளம் மூடப்பட்டுள்ளது.

5-ம் பக்கம்பார்க்க

## உருத்திரபுரம் ஐயர் கொலைவழக்கு

### 15-ந் திகதிக்கு ஒத்திவைப்பு

சாவகச்சேரி, வெள்ளி

உருத்திரபுரம் கோயில் ஐயர் காசிலிங்க சர்மா கொலை சம்பந்தமான புலன் விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லையென்றும் மேலும் அவகாசம் தருமாறும் கிளிநொச்சி பொலிஸ் இஸ்பெக்டர் திரு. பொன்னுத்துரை கேட்டுக் கொண்டதற்கிணங்க வழக்கு விசாரணையை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்தியலிங்கம் இம்மாதம் 15-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

உருத்திரபுரம் பிள்ளையார் கோயில் ஐயர் காணமல் போனதாகத் தேடப்பட்டுவந்ததும் சுமார் ஒரு மாதத்தின் பின் உருத்திரபுரத்தில் அவரது வளவுக்குள்ளிருந்த எருக்குவியலிலிருந்து காசிலிங்க சர்மாவின் சடலம் கிளறி

(5-ம் பக்கம்பார்க்க)

## அமெரிக்க உதவி நின்றது!

கொழும்பு, வெள்ளி

நேற்று நள்ளிரவு 12 மணிமுதல், இலங்கைக்கு அமெரிக்கா அளிக்கும்உதவி நிறுத்தப் பட்டுவிட்டதாக அமெரிக்க செய்திஸ்தாபன அறிவிப்பு கூறுகிறது.

இதைத் தொடர்ந்து இன்று நள்ளிரவு நடைபெற்ற மந்திரிசபையின் அவசரக் கூட்டத்தில் நஷ்டஈடு சம்பந்தமாக இனி அமெரிக்க எண்ணெய்க் கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில்லையென தீர்மானிக்கப் பட்டது.

## ஹேவாஹெட்ட தேர்தல் ஆட்சேபமனு தள்ளுபடி

கொழும்பு, வெள்ளி

ஹேவஹெட்டா தொகுதியிலிருந்து திரு. டி. பி. இலங்கரத்தின பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்டமனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

திரு. இலங்கரத்தின ஹேவஹெட்டா தொகுதியிலிருந்து பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டது முறையல்லவென்றும் அவரது தேர்தல் செல்லுபடியாகாததென்றும் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கோரி திரு. எம். ஏ. டானியல் அப்புஹாமி தாக்கல் செய்திருந்த மனுமீது நீதியரசர் திரு. கிங்ஸ்லிஹெரத் முன்னிலையில்

(5-ம் பக்கம் பார்கக)

## ராஜா தேசிங்கு

கொழும்பு, வெள்ளி

திரைப்பட தணிக்கை சபையினல் ஒரு தடவை தடை செய்யப்பட்ட தமிழ்ப் படமான 'ராஜா தேசிங்கு' இப்பொழுது மீண்டும் சபாயர் தியேட்டருக்கு வந்திருக்கிறது. இத்திரைப் படத்தை வந்து பார்க்கும்படி, கைத்தொழில் உள்நாட்டு கலாச்சார அமைச்சு முஸ்லிம் எம். பி.க்கள் எல்லோருக்கும் மற்றும் முஸ்லிம் செனட்டர்கள், சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் அழைப்பு விடுத்திருக்கிறது.

'ராஜா தேசிங்கு' திரைப்படம் முதற்தடவை இங்கு வந்தபொழுது, பல முஸ்லிம் சங்கங்கள் இப்படத்துக்கு ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்து, இப்படத்தை தடை செய்வதென்று திரைப்பட தணிக்கைசபை முடிவுசெய்தது.

## புகார்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு அரசினர் கடந்த இருவருட காலமாக நன்கொடைப் பணவுதவி வழங்காதமை குறித்து யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசச் செயலாளர் திரு த. துரைசிங்கம் வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் முறையிட்டுள்ளார். அரசினர் நன்கொடைப் பண உதவி கிடைக்காமையால் மேற்படி நிலையங்கள் ஆக்கவேலைகள் பலவற்றைச் செய்ய முடியாதிருப்பதாகவும், ஏனைய பகுதிகளிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் இப்பகுதியிலுள்ள நிலையங்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நடமாடும் வாசிகசாலை

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு சிறுவர் கலைக் கழகக் கூட்டம் செல்வி. வனஜா பரம் தலைமையில் நடைபெற்றது. கழகத்தின் சார்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நடமாடும் வாசிகசாலை நிர்வாகக் குழுவினராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மாஸ்டர் சிவலிங்கம் (கழகப் போஷகர்) செல்வன் சிவகுமார் கந்தையா, செல்விகள் நளினி இராமச்சந்திரன், ரவீந்திரா இராஜதுரை, வனஜா பரம், சரோஜா ஜோசப், றெஜினா இராஜதுரை.

## கேள்வி விளம்பரம்

மயிலிட்டி கிராமசபைத் தலைவரால் "புதிய குரும்பசிட்டி ஒழுங்கை" வேலைக்கான கேள்விகள் 23-2-63 காலை 9-30 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ரூபா 10,000/-க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் இவ்வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.

3. கேள்விப் பத்திரங்கள் ரூபா 25/-கட்டி கிராமசபைக் கந்தோரில் 21-2-63 பகல் 12மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

4. மேற்கொண்டு இதைப் பற்றிய விபரங்கள் கிராமசபை அலுவலகத்தில் வேலை நேரங்களில அறிந்துகொள்ளலாம்.

E. Rajadurai,
தலைவர்,
மயிலிட்டிகிராமசபை.

கி. ச. அலுவலகம்,
மயிலிட்டி,
6-2-63 699

## கேள்விப்பத்திர அறிவித்தல்

பரந்தன், குமரபுரம் பலநோக்கக் கூட்டுறவுச்சங்கத்திற்கு ஒரு நெற்கிட்டங்கி கட்டுவதற்காக தென்யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் கேள்விப்பத்திரங்கள் 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ந் திகதி காலை 12 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் உறையில் இடதுபக்க மூலையில் "நெற் கிட்டங்கிக்கான கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாணவங்கி (பரந்தன் கிளை)யில் ரூபா 50 கேள்விப்பத்திர வைப்புப் பணமாகக் கட்டப்பட்ட பற்றுச்சீட்டு காண்பிப்பதன்பேரில் பரந்தன் தென் யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் அலுவலகத்தில் 1963-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ந் திகதி காலை 10 மணிவரையும் கேள்விப்பத்திரப்படிவங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். கட்டிடத்தின் மாதிரிப்படத்தைத் தென்யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் அலுவலகத்தில் பார்வையிடலாம். இவ்வேலையை ஏற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்கள் என்பதற்குப் போதிய அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கே இதற்குரிய பத்திரங்கள் வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் தாம் ஒப்புக்கொண்ட ஒப்பந்தத் தொகையில் 5 வீதத்தைப் பிணைப்பணமாகக் கட்ட வேண்டும். கேள்விப்பத்திரம் ஏற்றுக கொள்ளப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் வேலையைஏற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களை தென்யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து பெற்றுககொள்ளலாம்.

(ஒப்பம்) மு. சின்னத்தம்பி
தென்யாழ்ப்பாணக் கூட்டுறவு
அபிவிருத்தி உதவி
ஆணையாளர்.

கூட்டுறவு அலுவலம்,
பரந்தன்,
25-1-62. 680






## வரி விளம்பரம்

### விஞ்ஞான முறையில் உடைகள் தயாரித்தல்

யாழ்ப்பாணம் ஈஸ்வரி இன்ஸ்டிடியூட்டில் விஞ்ஞான முறைகளில் உடைகள் தயாரித்தல், வண்ணத்தையல், பின்னல் வேலைகள் முதலியன பயிற்றப்படும். விண்ணப்பிக்கவும்.

ஈஸ்வரி இன்ஸ்டிடியூட்
25/2, மணிக்கூட்டுவீதி
697 யாழ்ப்பாணம்.

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## ஒரே தோணியில் 50 இந்தியர்

மன்னர், வெள்ளி

தூத்துக்குடியிலிருந்து சட்டவிரோதமாக ஒரே தோணியில் வந்திறங்கியதாக, 50 இந்தியர்கள், வங்காலைக் கடற்கரையில் வைத்து வங்காலை விதானையாரால் பிடிபட்டனர். பின்னர் மன்னர் பொலிஸ் நிலையத்தில் இவர்கள் விசாரணை செய்யப்பட்டனர்.

# இந்தியா வெளியேறியது! ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டிலிருந்து!

## சீன-இந்தியபிரச்னைபற்றிய பிரேரணை நீக்கப்பட்டதால்!

## ஸ்தாபனத்திலிருந்தே இந்தியா விலகிவிடலாம்

மோஷி, பெப். 8

தங்கனிக்காவில் மோஷி நகரில் நடைபெற்றுவரும் மூன்றுவது ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை மகாநாட்டில் அரசியல் கூட்டத்திலிருந்து இந்தியக் கோஷ்டி நேற்றிரவு வெளியேறியது. சீன-இந்திய எல்லைத் தகராறு சம்பந்தமாக இந்தியா கொண்டுவந்த ஒரு பிரேரணையை நிகழ்ச்சி நிரலிலிருந்து நீக்கிவிடுவதென்று முடிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்தே இந்தியக் கோஷ்டி வெளிநடப்புச் செய்தது.

### ஸ்தாபனத்திலிருந்தே வெளியேறும்?

இதன்பின் இந்தியக் கோஷ்டியின் தலைவர் திரு. சமன்லால் நிருபர்களிடம் பேசுகையில் ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்திலிருந்தே இந்தியா விலகிவிடுவதற்கு இந்த வெளிநடப்பு ஒரு முன்னோடியாக அமையக் கூடும் என்று கூறினர்.

### இந்தியப் பிரேரணை

இந்திய-சீன எல்லைப் பிரச்னைக்கு சமரசத் தீர்வு காணுமுகமாக கொழும்பில் கூடிய ஆறு ஆசிய-ஆபிரிக்க நடுநிலைமை நாடுகள் தெரிவித்த யோசனைகளை அங்கீகரிக்கவேண்டுமென்றும் இந்த யோசனைகளை நிபந்தனையோ, வியாக்கியானங்களோ எதுவுமின்றி அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ளும்படி சீனவைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் இந்தியா பிரேரணை கொண்டு வந்தது. இந்தப் பிரேரணை சர்ச்சைக்குரிய விஷயமென்றும் சர்ச்சைக்குரிய விஷயங்களை இந்த மகாநாடு தவிர்க்கவேண்டுமென்றும் தங்கனிக்கா மந்திரியும் பிரதிநிதியுமான மொனுங்கோ தெரிவித்து இப்பிரேரணையை நிகழ்ச்சி நிரலிலிருந்து நீக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். இப்பிரேரணையை நிகழ்ச்சி நிரலிலிருந்து நீக்குவதென முடிவு செய்யப்பட்டதும் அதை ஆட்சேபித்து இந்தியக் கோஷ்டி வெளிநடப்புச் செய்தது. சீனவின் நிர்ப்பந்தத்தின்மீதே இப்பிரேரணை நிகழ்ச்சி நிரலிலிருந்து நீக்குவதற்கு முயற்சி செய்யப்பட்டதெனக் கருதுவதாக இந்தியக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

### மலாயா, சிங்கப்பூருக்கு அனுமதி மறுப்பு

ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தில் சேருவதற்கு மலாயாவும் சிங்கப்பூரும் கூட்டாகச் செய்த மனுவை மகாநாடு நிராகரித்துவிட்டது. இந்தோனேஷியாவும் சீனவும் மலாயா, சிங்கப்பூரின் மனுவை எதிர்த்தன.

ஒலிம்பிக் விளையாட்டு

## இந்தோனேஷியா கலந்துகொள்ள தடை

### ஒலிம்பிக் கமிட்டி தீர்மானம்

டோக்கியோ, பெப். 8

சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இந்தோனேஷியா கலந்து கொள்வதற்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தடைவிதித்துள்ளது.

சென்ற ஆகஸ்ட் மாதத்தில் ஜாகர்த்தாவில் நடைபெற்ற நான்காவது ஆசிய விளையாட்டு போட்டியில இஸ்ரேலையும் தேசிய சீனவையும் கலந்து கொள்ள இந்தோனேஷியா அனுமதி மறுத்ததும் விளையாட்டில் அரசியலைக் கலக்கக்கூடாதென்று இந்தியப் பிரதிநிதி ஸோந்தி அபிப்பிராயம் தெரிவித்ததனல் அவரை இந்தோனேஷியர்கள் தாக்க முற்பட்டதும், அவர் இந்தியஸ்தானிகர் காரியாலயத்தில் தஞ்சம் புகுந்து அதன் பின் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றதும் வாசக நேயர்களுக்கு நினைவிருக்கும்.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியில் இந்திய பிரதிநிதி திரு. ஸோந்தி பேசுகையில் விளையாட்டில் அரசியலைக் கலக்கக்கூடாதென்றும் தெரிவிக்கும் மூன்று அம்ச யோசனைகளை சமர்ப்பித்தார்.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தீர்மானப்படி ஒலிம்பிக் விளையாட்டுக்களில் இந்தோனேஷியா கலந்து கொள்வதற்கு காலவரையறையின்றித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## 'என். எம். சேவை நாட்டுக்குத்தேவை'

### பிரதமருக்கு தஹநாயக்கா சிபார்சு

கொழும்பு, வெள்ளி

"வேலையில்லாப் பிரச்னையை ஆராய்வதற்கு, டாக்டர் என். எம். பெரேரா போன்ற நாட்டிலுள்ள ஆற்றல் படைத்தவர்களை அழைக்க வேண்டும். டாக்டர் என். எம். மின் சேவை இந்த நாட்டுக்கு மிகவும் அவசியமாகும்." என்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் நேற்று காலி எம். பி. திரு. டபிள்யு. தஹநாயக்கா பேசுகையில் கூறினர்.

திரு. தஹநாயக்கா தொடர்ந்து பேசுகையில், இந்த நாட்டுக்கு ஒரு தேசிய அரசாங்கம் தேவையென்று தாம் கூறியபொழுது அங்கத்தவர்கள் தம்மைப் பார்த்து சிரித்தனரென்றும், ஆனல் இப்பொழுது இலங்கை - இந்திய பிரச்னையைத் தீர்ப்பதற்கு பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர்களை அழைக்க யோசித்திருக்கிருர் என்றும் கூறினர்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை, டாக்டர் என். எம். சுலபமாகத் தீர்த்துவைப்பார். அந்த ஆற்றல் மட்டுமின்றி, இந்த நாட்டின் பல பிரச்னைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய திறமையும் அவரிடம் இருக்கிறது. இவரின் சேவையை அரசாங்கம் பயன்படுத்திக்கொண்டால் பல பிரச்னைகள் சுலபமாகத் தீர்க்கப்பட்டுவிடும். டாக்டர் என். எம் பெரேரா மந்திரிசபையில் சேர்க்கப்பட்டு தேசிய அரசாங்கம் நிறுவப்படவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றேன் என்றும் திரு. தஹநாயக்கா கூறினர்.

### 150 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்

தெனியாயா, வியாழன்

தெனியாயா தொகுதியிலுள்ள பெங்கால் வித்தியாலயத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட தலைமை ஆசிரியர், தலைமை ஆசிரியர் பதவியைப் பொறுப்பேற்றபொழுது அங்கு 8 வகுப்புகளும் 150 மாணவர்களும் இருப்பதாக அவதானித்தார். இத்தனை மாணவர்களுக்கும் தாம் மட்டும் தான் கல்வி போதிக்க வேண்டும் என்ற நிலையை உணர்ந்த போதுதான் அவர் சிறிது துணுக்குற்ருர்.

1962-ம் வருடத்தில் இந்தப் பாடசாலையில் 4 ஆசிரியர்கள் இருந்தார்கள். ஆனல் இவர்கள் எல்லோரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதைத் தொடர்ந்தே இப்பொழுது மேற் குறிப்பிட்ட தலைமை ஆசிரியர்மட்டுப் இந்தப் பாடசாலையில் சேவைசெய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### மாசி கிடைக்கவில்லையா?

கொழும்பு, வெள்ளி

உத்தரவுபெற்ற விநியோகஸ்தர் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் உங்களுக்குரிய பங்கீட்டு மாசியைக் கொடுக்க மறுத்தால் இந்த விஷயத்தை உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுவரும்படி உணவுக் கமிஷனர் அறிவித்துள்ளார்.

உணவுக் கமிஷனர், பொது மக்களுக்கு விடுத்த ஓர் அறிக்கையில், பெப்ரவரி மாதத்தில் பங்கீட்டு அரிசி பெறும் ஒரு நபருக்கு அரை அவுன்ஸ் வீதம் பங்கீட்டு மாசி கொடுக்கப்படும் என்றும் அதனுடன் ஒரு நபருக்கு அரை ருத்தல் பங்கீட்டு மைசூர்ப் பருப்பும் கொடுக்கப்படுமென்றும். இவற்றைப் பாவனையாளர்கள் கேட்டு வாங்கவேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

### தூரனுக்கு பாராட்டு

சென்னை, பெப். 8

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்ட கலைக் களஞ்சியத்துக்கு அதன் முதன்மை ஆசிரியராகவிருந்து ஆற்றிய சிறந்த பணிக்காக திரு. ம. ப. பெரியசாமித்தூரனைப் பாராட்டி அவருக்கு நிதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம் மாதம் 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஹோட்டல் அசோகாவில் இவ்வைபவத்தையொட்டி தேநீர் விருந்தொன்றும் நடைபெறவிருக்கிறது. மத்திய அரசாங்க மந்திரி திரு. சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் தமிழ்நாடு முதல் மந்திரி திரு. கே. காமராஜர் திரு. தூரனுக்கு நிதிவழங்குவார். ராஜா சர். முத்தையா செட்டியார் வரவேற்புரையும் திருமதி சௌந்தரம் கைலாசம், உயர்நீதிமன்ற நீதிபதி மா. அனந்தநாரயணன் திரு தி. சு. அவினசிலிங்கம் செட்டியார், டாக்டர் மு. வரதராசன் ஆகியோர் பாராட்டுரையும் வழங்குவர்.

### சோஷலிஸ்ட் இணைப்பு இல்லை?

புதுடில்லி, பெப். 8

பிரஜா சோஷலிஸ்ட் கட்சியும் சோஷலிஸ்ட் கட்சியும் ஒன்ருக இணையும் முயற்சி சமீபத்தில் பிரஜாசோஷல்ஸ்ட் கட்சி நிறைவேற்றிய தீர்மானம் காரணமாக இப்போதைக்கு வெற்றியளிக்க மாட்டாது என்று சோஷலிஸ்ட் கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

### இக்கேடாவை கொல்ல சதி! இருவர் கைது

டோக்கியோ, பெப். 8

ஜப்பான் பிரதமர் இக்கேடாவையும் மற்றும் ஜப்பானிய அரசாங்கக் கட்சியின் இரு தலைவர்களையும் கொலைசெய்ய திட்டமிடப்பட்ட சதியைக் கண்டுபிடித்ததாக ஜப்பானிய பொலிஸார் அறிவித்துள்ளனர். இச்சதித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக டோக்கியோவுக்குச் செல்லவிருந்த இருவரைத் தாங்கள் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் அறிவித்தனர்.

### பத்தேசிங் நன்கொடை

புதுடில்லி, பெப். 8

அகாலிடால் இயக்கத் தலைவர் திரு. ஸன்பத்தேசிங்நேற்று பிரதமர் நேருவைச் சந்தித்து சிரோமணி குருத்துவாரா பிரபந்தக் கமிட்டியின் சார்பில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு 50,000 ரூபாய் அளித்தார்.

### தமிழாசிரியர் சங்க பொதுக் கூட்டம்

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு தமிழாசிரியர் சங்க மூன்ருவது வருடாந்தப் பொதுக் கூட்டம் 12-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் சென். மேரிஸ் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல், பிரேரணைகள் நிறைவேற்றல், புதிய உத்தியோகஸ்தர் தெரிதல் ஆகிய முக்கிய நிகழ்ச்சிகள் இடம் பெறவிருக்கின்றன.

### லஞ்சக் கமிஷன் வேண்டும்

#### குருநாகலை மாநகரசபை கோரிக்கை

குருநாகலை வெள்ளி

குருநாகலை மாநகரசபைக்கு ஒருலஞ்சக் கமிஷன் வேண்டும் என்று கோரும் ஓர் தீர்மானம் அண்மையில் நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

குருநாகலை மாநகரசபையில் கடமையாற்றும் அதிகாரிகளுக்கும் மற்றும் சபை அங்கத்தவர்களுக்கும் எதிராகச் சில வருடங்களுக்கு முன்னர் சுமத்தப்பட்ட லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கு குருநாகலை மாநகரசமைக்கு ஒரு லஞ்சக் கமிஷன் வேண்டும் என்று 1961-ம் ஆண்டு முதல் கேட்கப்பட்டுவந்த பொழுதிலும் இதுவரை இப்படியான ஒரு கமிஷன் நியமிக்கப்படவில்லையென்று சபை அங்கத்தினர்கள் தெரிவித்தனர்.

இத் தீர்மானத்தைக் கொண்டுவந்த திரு. ஏ. எச். வீரசிங்கா பேசுகையில், சபை அங்கத்தவர்களுக்கும் அதிகாரிகளுக்குமெதிராக சுமத்தப்பட்ட லஞ்சக் குற்றச்சகட்டுகளை விசாரணை செய்தற்கு விசாரணைக்கமிஷன் ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென்று 1961-ம் ஆண்டில் சபை ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியதென்றும் ஆனல் இதுவரை நடவடிக்கையெடுக்கப்படவில்லையென்றும் கூறினர்.

குருநாகலை மாநகரசபையின் தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் விரைவில் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் அவர் கூறினர்.

### அங்கத்தவர் இராஜினமா

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு நகரசபையின் நாலாம் வட்டார அங்கத்தவர் திரு.எஸ்.குழந்தைவேல் தமது அங்கத்தவர் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். திரு.எஸ். குழந்தைவேல் கிழக்கிலங்கை தமிழாசிரியர் சங்க காரியதரிசியும், அகில இலங்கை தமிழாசிரியர் சங்க நிர்வாகசபை அங்கத்தவருமாவார்.

### மணி வாக்கு

நாம் உண்மையில் அஹிம்ஸாவாதிகளாயின், உலகிலே மிகமிகத் தாழ்ந்த நிலையிலுள்ளவரிடம் இல்லாத எதையும் நாம் பெறவிரும்பக் கூடாது. எந்தவிதத்திலும் யாரையும் சுரண்டாமலிருப்பது அவசியமாகும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு தை மீ 27உ (9-2-63)


## நமது நன்றி

"ஈழநாடு" குழந்தைக்கு நான்கு ஆண்டுகள் நிறைந்து இன்று ஐந்தாவது ஆண்டு பிறக்கின்றது. மகிழ்ச்சியான இந்த சமயத்தில், இதுவரை தன்னை ஆதரித்து ஊட்டி வளர்த்துவரும் அன்பர்கள் அனைவருக்கும் இச்சின்னஞ் சிறு பாலன் தன் இருகரங்களையும் கூப்பி நன்றியுடன் அஞ்சலி செலுத்துகின்றான்.

யாழ்ப்பாணத்திலே ஒருதின சரிப்பத்திரிகை நடத்துவது ஒரு புதுமையாகும். இதுவரை இங்கு எவ்வளவோ பெரியவர்கள் நினைத்தும் நிறைவேற்ற முடியாதிருந்த இக்காரியத்தை துணிச்சலுடன் வெற்றிகரமாக 'ஈழநாடு' செய்து வருவதாக பல அன்பர்களும் நல் வார்த்தை கூறிப்பாராட்டுகையில் நமக்குப் புதுஉற்சாகமும் நம்பிக்கையும் ஏற்படுவதாகவுள்ளது.

இக்காலத்திலே ஒரு தின சரிப்பத்திரிகை நடத்துவதற்குத் தேவையான வசதிகள் மிக அதிகம். அத்துடன் ஒப்பிடுகையில் இப்பத்திரிகைக்கு அதில் ஓரளவுதானுமில்லை. என்றாலும் கொழும்புப் பத்திரிகைகளுக்கும் முன்னதாகவே பலபல செய்திகளையும் உடனுக்குடன் சுடச்சுட 'ஈழநாடு' தினசரி அளித்துவருவதாகவும், நடுநிலைமை நின்று கண்ணியமாக இது நடப்பதாகவும் பல அன்பர்களும் இன்று புகழ்வதாயின், அதற்குக் காரணம் திருவருளும் அன்பர்களின் ஆதரவும்தான். தெய்வ அருள் இருப்பின் ஒருமுடவனும்கூட ஒரு மலையையும் தாண்டிவிட முடியுமென்ற வாக்குத்தான் நமக்கு ஞாபகம் வருகிறது.

ஒரு தினசரிப் பத்திரிகை வெறும் வர்த்தக ஸ்தாபனமன்று. அதுமக்களின் குரல், மக்களின் ஊழியன். தங்கள் குறைகளையும் கருத்துக்களையும் மக்கள் எடுத்துக் கூறவும் உலகச் செய்திகளை அவ்வப்போது அறியவும், சமூக வாழ்க்கை அபிவிருத்தி அடையவும் தினசரிப்பத்திரிகை இன்றியமையாதது. அதிலும் இன்றைய சூழ்நிலையில், யாழ்ப்பாணத்திலிருந்து ஒரே தினசரிப்பத்திரிகை நல்லபடியாக வெளிவருவதின் முக்கியத்தையும் அவசியத்தையும் விளக்கத் தேவையில்லை.

'ஈழநாடு' உங்கள் பத்திரிகை. சமூகத்துக்கும் நாட்டுக்கும் தொண்டு செய்யவே அது காத்துள்ளது. அது வளருவதெல்லாம் உங்கள் கையில்தானுள்ளது. அதன் வளர்ச்சி உங்கள் வளர்ச்சி. இளம்வயதில்தான் இக்குழந்தைக்கு ஆதரவு அதிகம் தேவை. வர்த்தக அன்பர்கள் விளம்பரங்கள் அளித்தும், பொதுமக்கள் சந்தாதாரராகச் சேர்ந்தும், ஏஜென்ஸி அன்பர்கள் நிலுவையில்லாமல் உடனுக்குடன் உதவியும் வந்தால் 'ஈழநாடு' மேன்மேலும் வளர்ந்து, உங்களுக்கு அதிகமான தொண்டைச் சிறப்பாகச் செய்ய முடியும். திருவருள் அவ்விதம் பணிசெய்ய தன்னை ஆளாக்கிவிடுமென்ற பது நம்பிக்கையுடனே "ஈழநாடு" தன் ஐந்தாவது பிராயத்தை ஆவலுடனும் பணிவுடனும் எதிர்நோக்குகின்றது.

# சமசந்தர்ப்பம் அளிக்கும் இன்றைய கல்விமுறை

## 'மாணவருக்கு ஒரு வரப்பிரசாதம்' — அமைச்சர்

மின்னேரியா, வெள்ளி

"முன்பெல்லாம் மேல்படிப்பு, உயர்தரக்கல்வி என்பதெல்லாம் பணக்காரருக்கும் மற்றும் சில குறிப்பிட்ட வகுப்பினருக்குமே ஏகபோக உரிமையாகவும் உடைமையாகவுமிருந்து வந்தது. ஆனால் இன்று நிலைமை அப்படிஇல்லை. எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கும் ஒரு கல்வித்திட்டமே பொதுமக்கள் முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது" என்பதாக காணி விவசாய அமைச்சர் திரு. ஸி. பி. டி' சில்வா இங்கு ராக்கொடையில் நடைபெற்ற ஒரு பாடசாலை வைபவத்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

மாகாண கல்வித்தாபனங்களிலிருந்து வரும் நல்ல மாணவர்கள் அத்தனைபேருக்கும் அவர்களது திறமைகளுக்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் சமசந்தர்ப்பம் அளிக்கப் பட்டுவருகிறது என்று அமைச்சர் மேலும் கூறினார்.

அமைச்சர் தொடர்ந்து கூறியதாவது:-

இன்றைய அரசாங்கமானது மற்ற எந்தப் பகுதியையும்விட கல்விக்கும் சுகாதாரத்துக்குமே பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு வருகிறது. ஒருவர் பிறந்த கிரகபலன் அவரது ஜாதகக்கணிப்புப்படி மேலானதாயிருந்த போதிலும் அவர் கல்விஅறிவு இல்லாதவராயிருந்தால் அவருக்குச் சிறப்பு இருக்காது. பாடசாலை மாணவர்கள் எதிலும் ஓர் ஒழுங்கு முறையைக கடைப்பிடிக்க கற்றுக்கொள்ளவேண்டும், அந்தப் பயிற்சி வாழ்க்கைகளில் மக்கள் மத்தியில் அவர்களுக்கு முன்னிடத்தைத் தேடித்தரும் என்பது நிச்சயம்.

## அபேட்சை மனுக்கள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் தேர்தல் பகுதி இம்மாதத்தில் ஏற்றுக் கொள்ளப்படவிருக்கும் அபேட்சை மனு திகதிகளையும், இடைத் தேர்தல் திகதிகளையும் அறிவித்துள்ளது.

நாவற்குழி கிராம சபை 1-ம் வட்டாரத்திற்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 28-ம் திகதி ஏற்றுக்கொள்ளப் படவிருக்கிறது.

நாவற்குழி கிராமசபை 11-ம் வட்டார இடைத் தேர்தல் இம் மாதம் 27-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

கோப்பாய் கிராமசபை-3ம் வட்டார இடைத் தேர்தல் இம்மாதம் 23-ம திகதி நடைபெறவிருக்கிறது.

## பென்ஷன் தாமதம்

### திறைசேரி பொறுப்பல்ல

கொழும்பு, வெள்ளி

பென்ஷன் வழங்குவதில் தாமதமேற்படுவதற்கு திறைசேரி பொறுப்பல்லவென்றும் ஓய்வு பெறுபவர்களது விபரங்களை சம்பந்தப்பட்ட இலாகாக்கள் திறைசேரிக்குத் தெரிவிப்பதில் தாமதமேற்படுவதாலேயே இவ்விதம் ஏற்படுகிறது என திறைசேரி அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பென்ஷன் விரைவில் வழங்கப்படுவதற்கு தேவையான விபரங்களைத் தாமதமின்றி சம்பந்தப்பட்ட இலாகாக்கள் அனுப்பவேண்டும்.

இந்த தாமதத்திற்கு திறைசேரியிலுள்ள உத்தியோகஸ்தர்களது திறமைக்குறைவோ உத்தியோகஸ்தர்கள் பற்றாக்குறையோ காரணமல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் இவ்வித தாமதம் குறித்து செனட்டர் மாணிக்கம் செனட்டில் கேள்வி பொன்றை எழுப்பியிருந்தார்.

## 300 யார் செல்ல 12 மணித்தியாலம்!

### தந்தியின் 'நத்தை' வேகம்

கொழும்பு, வெள்ளி

ஒரு தபாற் கந்தோரிலிருந்து 300 யார் தூரமுள்ள ஒரு இடத்துக்கு அனுப்பப்பட்ட தந்தி, குறிப்பிட்ட இடத்தை அடைவதற்கு 12 மணித்தியாலங்கள் எடுத்திருக்கிறது!

கொழும்பு மத்திய தந்திக் காரியாலயத்தில் கடந்த புதன் கிழமை இரவு கொடுக்கப்பட்ட தந்தியொன்று, குறிப்பிட்ட இடத்தை அதாவது தந்திக் கந்தோரிலிருந்து 300 யார் தூரத்திலுள்ள இடத்தைப் போய்ச் சேர்வதற்கு அத் தந்திக்கு 12 மணித்தியாலங்கள் தேவைப்பட்டிருக்கிறது.

நண்பர் ஒருவருக்குப் பிறந்த தின வாழ்த்து அனுப்பும்பொருட்டு மூவர் தந்திக் காரியாலயத்துக்குச் சென்று 80 சதம் கொடுத்து தந்தியொன்றை அனுப்பிவைத்தனர். (நேரில் போகமுடியாத காரணத்தினுல் அவர்கள் தந்தியனுப்பினர்.) ஆனுல் பத்துச்சதம் கொடுத்து அவர்கள் பஸ்ஸில் செல்ல வேண்டிய தூரத்தை, அந்தத் தந்தி 'நத்தை' வேகத்தில் சென்று 12 மணிநேரம் கழிந்து குறிப்பிட்ட இடத்தை அடைந்தது.

## உணவுப்பொருள் இறக்குமதியில் தடை

### மே மாதத்திலிருந்து

கொழும்பு, வியாழன்

உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் ஆகிய உணவுப் பொருள்களுக்கு மேமாதத்திலிருந்து இறக்குமதிக்கட்டுப்பாட்டை விதிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக காணி, விவசாய, நீர்ப்பாசன அமைச்சர் திரு. ஸி. பி. டி' சில்வா தெரிவித்துள்ளார்.

எலாருவில் அரசாங்க அரிசி ஆலை ஒன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினர்.

அமைச்சர் திரு. சில்வா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எமது வெளிநாட்டு மூலதனத்தில் பெரும் பகுதியை இவ்வித உணவுப்பொருள்களின் இறக்குமதி கொண்டு சென்று விடுகிறது. இதன் காரணமாகவே இவற்றின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எண்ணுகிறது.

உள்ளூரில் இந்த உணவுப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

பெப்ரவரிக்குப்பின் அரிசித் தட்டுப்பாடு வரும் எனக்கூறப் படுவதை நான் ஆட்சேபிக்க விரும்புகின்றேன். அரிசி போதியளவு இருக்கிறது.

## நடுநிலைமைக் கொள்கை

### பிரதமர் வலியுறுத்தல்

கொழும்பு, வெள்ளி

"தலை சிறந்த நடு நிலைமைக் கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் இலங்கை போன்ற சிறிய தேசமும் உலக சமாதானத்துக்குத் தனது பங்கைச் செலுத்த முடியும்" என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இன்று காலை கொழும்பில் சர்வதேச வாலிபர் சோஷலிஸட் சங்க ஆசியக் கிளையின் மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த மகாநாட்டை இங்கு நடத்துவதற்கு முடிவு செய்ததற்காக இளைஞர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்த பிரதமர் 1956-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இந்நாட்டு மக்கள் முதல் வெற்றி பெற்றனர் என்ருர்.

"காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா சிறந்த வெளிநாட்டு நடுநிலைமைக் கொள்கையைக் கடைப் பிடித்து வழிகாட்டினர். நடுநிலைமைக் கொள்கையே உலக சமாதானத்துக்கு வழி வகுக்கும். மனித வர்க்கத்தின் வருங் காலமும் சந்தோஷமும் அதில் தான் பெரிதும் தங்கியுள்ளது" என்று பிரதமர் கூறினர்.

## வர்த்தகர்கள்மீது ரூ. 2 லட்சம் அபராதம்

கொழும்பு, வெள்ளி

சென்ற 12 மாதங்களில் இலங்கை பூராவிலுமுள்ள வர்த்தகர்களிடமிருந்து சுமார் 2 லட்சம் ரூபா அபராதமாகப் பெறப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

1961-ம் வருட இறுதியில் அமுலாகிய வர்த்தகர்கள் லைசன்ஸ் பெறவேண்டும் என்ற சட்டத்தை மீறியதற்காகவே அரசாங்க அதிபர்கள் இவர்களுக்கு அபராதம் விதித்தார்கள்.

வர்தகர்களுக்கு லைசன்ஸ் வழங்கும் அதிகாரம் பெற்றுள்ள அரசாங்க அதிபர்கள் இந்தக் கால எல்லையுள் சுமார் 27,544 லைசன்சுகள் வழங்கியுள்ளார்கள்

வர்த்தகத்தில் ஒழுங்கு, கட்டுப்பாட்டைப் பேணி நடககவும் ஊழல்களை ஒழித்துக்கட்டும் நோக்கமாகவுமே இந்த புதிய லைசன்ஸ் விதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

## உடபுசலாவை தோ. தொழிலாளர் வேலைநிறுத்தம்

நாரளை, வெள்ளி

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அங்கத்தினரான 1000 தொழிலாளர்கள் புதன் கிழமை முதல் வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர். இவர்கள் உடபுசலாவையிலுள்ள மூன்று தோட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். முதலில் ஒரு தோட்டத்தைச் சேர்ந்த 375 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஆரம்பிக்க அவர்களுக்கு ஆதரவாக மற்ற இரு தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்தார்கள். தொழிலாளர் யூனியனையும் தோட்ட முதலாளிகளையும் சமரசப்படுத்திவைக்க நாரளை தொழில் இலாகா உத்தியோகஸ்தர் முயற்சி எடுத்து வருகிருர்.

## செய்தித் திரட்டு

### இலவச சிகிச்சை

கொழும்பு, வெள்ளி

பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் சிவனொளிபாத மலைக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கு இலவச வைத்திய சிகிச்சையளிக்க சௌக்கியதான இயக்கம் ஒழுங்கு செய்துள்ளது.

### உண்மை சுதந்திரம்

கொழும்பு, வெள்ளி

உறபொல மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற விழாவொன்றில் சுகாதார உதவி மந்திரி திரு. ஜே. பி. ஒபயசேகரா பேசுகையில், இலங்கைக்கு இன்னும் உண்மையான சுதந்திரம் கிடைக்கவில்லையென்றும், பொருளாதார பிரச்னை தீர்ந்தால்தான் உண்மையான சுதந்திரம் கிடைக்குமென்றும் கூறினர்.

### பிரதமருக்கு மகஜர்

கொழும்பு, வெள்ளி

கிராம சேவகர்கள் நியமனம் குறித்து ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக மகஜர் ஒன்றை பிரதமரிடம் சமர்ப்பிப்பதென்று ஐக்கிய தேசியக் கட்சியின் பார்லிமெண்டரிக் குழு முடிவு செய்துள்ளது.

## யாழ் மாநகரசபை கூட்டத்தை விட்டு வெளியேறினர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகரசபையின் பொதுக்கூட்டம் நேற்று மாலை முதல்வர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்ற போது சபையின் முன்னுள் உபதலைவர் திரு. என். டி. செல்லத்துரை சபையைவிட்டு வெளியேறினர்.

நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டது போல் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தது. மூன்ருவது நிகழ்ச்சி நடந்து கொண்டிருகையில், முதலாவது நிகழ்ச்சியான பொதுக்கூட்ட அறிக்கை பற்றி திரு. என். டி. செல்லத்துரை பிரஸ்தாபித்த போது சபையில் உள்ள ஏனைய அங்கத்தவர்கள் கூட்ட அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டபின் அதில் திருத்தம் செய்யக் கூடாது என்பதனைச் சுட்டிக் காட்டினர்.

இதனை ஆட்சேபித்து திரு. என். டி. செல்லத்துரை கூட்டத்தை விட்டு வெளியேறினர். கூட்டம் தொடர்ந்து நடை பெற்றது.

## நல்லூர் எம்.பி.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லஞ்சம் வாங்குகிருர்கள் என்பதை நாடு அறியும். 120 அதிகப்படி வாக்குகளால் தெரிந்தெடுக்கப்பட்டவர் எங்களை லஞ்சம் வாங்குவதாக கூறுகிருரே?

உதவி சபாநாயகர்:-ஒழுங்கு! ஒழுங்கு!

ஒரு பிரச்னை எழுப்பப்பட்டுள்ளது. அதைப் படிக்க நேரம் வேண்டும். அங்கத்தவர் என்னை எனது அறையில் வந்து சந்திக்கவும்.

திரு. இலங்ரத்தின:- அந்த அறிக்கை காட்டப்பட வேண்டும்.

திரு. நாகநாதன்:- செய்தி வெளிவந்த பத்திரிகையை பார்க்க விரும்புகிறீரா?

திரு. இலங்கரத்தின:- அந்த அறிக்கையைப் பார்க்கவே நான் விரும்புகின்றேன். அந்த அறிக்கையின் புகைப்பட பிரதியை காட்டவேண்டும்.

திரு. நாகநாதன்:- அதை சமாப்பிப்போம்.

# நீதி மன்றத்தில் சாட்சி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய விசாரணையில் காலஞ்சென்ற கதிரன் சரவணையின் மனைவி தெய்வானைப்பிள்ளை சாட்சியமளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்:

வெள்ளாம்பகுதிப்பெண் ஒருவரை எனது மகன் நீதிமன்றத்தின் அனுமதிபெற்றுக் கலியாணம் முடித்துக்கொண்டதால் எதிரிகள் எனது புருஷனையும் எனது ஒன்றுவிட்ட தம்பியையும் சுட்டுக்கொன்றனர்.

சம்பவம் நடந்ததினத்தன்று நாங்கள் வீட்டிலிருந்தோம். இரவு ஒருமணியளவில் வீட்டுப் படலையில் யாரோ 'சரவணை' என்று கூப்பிட்டகுரல் கேட்டது. அப்பொழுது நல்ல நிலவு. நாங்கள் வெளியேவந்து பார்த்தோம். முத்தையா கணபதிப்பிள்ளை கையில் ஒரு துவக்குவைத்துக்கொண்டு நின்றார். பொன்னையா சுப்பிரமணியம் கையில் ஒரு பெட்டியும் சின்னையா சுப்பிரமணியம் கையில் ஒரு துவக்கும் வைத்துக்கொண்டிருந்தனர். ஆறுமுகம் பொன்னையா சும்மா நின்றார் எனது புருஷன் தலைவாசலால் வெளியே வந்தார்.

## சண்டியனு என்றுகேட்டு சுட்டார்

எனது புருஷன் வெளியே வந்ததும் முத்தையா கணபதிப்பிள்ளை "நீ சண்டியனு?" என்று கேட்டுக்கொண்டே சுட்டார் சுடப்பட்டதும் அவர் கீழே விழுந்தார். உடனேநான் "ஐயோ கணபதிப்பிள்ளை என்ரை புருஷனைச் சுட்டுப் போட்டான்" என்று குழறிய படியே ஓடிப்போய் புருஷனைத் தூக்கினேன்.

எதிரிகள் படலைக்குவெளியே போனார்கள். நானும் மகனும் வேலிக்குவெளியே எட்டிப் பார்த்தோம். எதிரிகள் வெளியே கூட்டமாக நின்றனர்.

## படலைநடுவில் விழுந்தார்

எனது ஒன்றுவிட்ட தம்பி சின்னவன் சின்னத்தம்பி சின்னப் படலைக்குள்ளால் வெளியே போனார். உடனே சின்னையா சுப்பிரமணியம் சுட்டார். சின்னத்தம்பி ஓடிவந்து படலைக்கு நடுவில் வீழ்ந்தார். நான் "சின்னத்தம்பியையும் சுட்டுப்போட்டாங்கள்" என்று குழறினேன்.

அதன் பின்னரும் இரண்டு வெடிச் சத்தம் கேட்டன.

சின்னத்தம்பி பெண்சாதியும் குழறிக்கொண்டு ஓடிவந்தார் சின்னத்தம்பியை உள்ளே தூக்கிக்கொண்டுவந்தது யார் என்பது தெரியாது. சின்னத்தம்பியின் பெண்சாதிதான் தூக்கி வந்ததாக நான் நினைத்திருந்தேன்.

தம்பர் நாகரிடம் இதுபற்றிச் சொன்னோம். சிறிது நேரத்தில் சின்னப்பிள்ளை, தன்னுடைய புஷனையும் சுட்டுப்போட்டதாகக் குழறிக்கொண்டு ஒடிவந்தார்.

## முதல் எதிரிக்கு மகள் முறை

எனது மகன் கலியாணம் கட்டிய பெண் முதல் எதிரிக்கு மகள் முறை. மூன்றும் எதிரியும் சொந்தக்காரர். எனது மகன் தனது மனைவியுடன் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இருந்திருக்கிறார். தைப் பொங்கலுக்கு வரும்படி நான் கடிதம் எழுதிக் கூப்பிட்டிருந்தேன். அவர்கள் வந்திருந்து பொங்கல் சாப்பிட்டபின் போய்விட்டார்கள்.

எதிரிகளின் சார்பில் ஆஜரான பிரதம வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தெய்வானையை குறுக்கு விசாரணை செய்தார்:-

ஜி. ஜி.: கணபதிப்பிள்ளையின் மருமகள்தானே உன்மகனை முடித்தது.

தெய்: ஆம்!

ஜி. ஜி.: வேறு கணபதிப்பிள்ளையை தெரியுமா?

தெய்: தெரியாது

ஜி. ஜி: மருமகளின் தகப்பனின் முழுப்பெயர் தெரியுமா?

தெய்: தெரியாது

ஜி. ஜி.: சம்மந்தியின் பெயர் கூடத் தெரியாது? (கோர்ட்டில் சிரிபபு)

ஜி. ஜி.: சரசாலை வீட்டில் எவ்வளவு காலம் வசிக்கிறாய்?

தெய்: பிறந்தநாள் முதல்

ஜி. ஜி: எதிரிகள் உன் வீட்டடியால் போகிறவர்களா?

தெய்: ஆம்!

ஜி. ஜி.: உன்மகன் தவமணியை திருமணம் செய்ததற்கும் வெடி நடந்த நாளுக்கும் மிடையில் எட்டு மாதம் இருக்கும்

தெய்: ஆம்!

ஜி. ஜி.: அந்த எட்டு மாத காலம் எதிரிகள் உன்வீட்டடியால் போகிறவர்கள்

தெய்: ஆம்!

ஜிஜி.: அப்பொழுது யாராவது பயமுறுத்தினார்களா?

தெய்: இல்லை

ஜி. ஜி.: தவமணியை கடத்தியதாக உன்மகன் மீது வழக்கு தொடர்ந்தது முதலாம் எதிரி என்று தெரியுமா?

தெய்: தெரியாது

ஜி. ஜி.: மகனும் மருமகளும் எப்போ வீட்டுக்கு வந்தார்கள்?

தெய்: தைப்பொங்கலன்று காரில் ! வந்தார்கள்.

ஜி. ஜி.: அன்று உங்கள் வீட்டில் தங்கினார்களா?

தெய்: பயத்தால் பெரிய தகப்பன் வீட்டிற்கு போய் விட்டார்கள்

ஜி. ஜி.: தவமணியின் இனத்தவர்களுள் முதலாம் எதிரி செல்வாக்குள்ளவரா?

தெய்: தெரியாது

ஜி. ஜி.: 'சரவணை' என்று கூப்பிட்டதும் யார் வந்தது?

தெய்: நான் வந்தேன்

ஜி. ஜி.: தலைவாசலில் படுத்திருந்த உன் கணவனும் மகனும் வரவில்லை-பின் வீட்டில் இருந்த நீ ஏன் வந்தாய்?

தெய்: சத்தம் கேட்டதும் வந்தேன்

ஜி. ஜி.: வெளியில் இருவரை துவக்குடன் கண்டதும் ஏன் கத்தவில்லை?

தெய்: கத்தமுன் சுட்டுவிட்டார்

ஜி. ஜி.: வீட்டு வாசலில் இருந்து எவ்வளவு தூரம் வந்ததும் வெடி கேட்டது?

தெய்: 15 அடி தூரம்

ஜி. ஜி: நிலவு வெளிச்சத்தில், வீட்டால் இறங்கி வர எதிரிகளை துவக்குடன் கண்டதும், 15 அடி வருமட்டும் ஏன் கத்தவில்லை?

தெய்: (மௌனம்)

ஜி. ஜி.: வெடிக்கு முன்பா? பின்பா? கணவனை கண்டாய்

தெய்: முன்பு

ஜி. ஜி.: கணவனுக்கு அபயாம் என்று தெரிந்ததும் ஏன் உடனே குளறவில்லை?

தெய்: (மௌனம்)

ஜி. ஜி.: மகன் தேவராசனை கண்டாயா?

தெய்: இல்லை

ஜி. ஜி.: தலைவாசலில் இருந்து கணவன் எவ்வளவு தூரம் வெளியில் வந்ததும் வெடி விழுந்தது

தெய்: 4 அடி வந்ததும்

ஜி. ஜி: அவ்வளவும் ஏன் கத்தவில்லை.

இந்நிலையில் தெய்வானைப்பிள்ளை சாட்சிக் கூண்டில் மயங்கி விழுந்ததால், தொடர்ந்து குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

பிரேதங்களை பரிசோதனை செய்த சட்டவைத்தியர் திரு. வைத்திலிங்கம் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

ஜி. ஜி.: காயங்களில் இருந்து சூடு முன்னால் இருந்து சுடப்படவில்லை யல்லவா?

டாக்ட்ர்: ஆம்

ஜி. ஜி.: முன்னால் சுட்டிருந்தால் சன்னங்கள் பின்னுக்கு வந்திருக்குமல்லவா

டாகடர்: ஆம்

ஜி. ஜி. இறந்த சரவணையின் உயரம் என்ன?

டாக்டர்: 5 அடி $2\frac{1}{2}$ அங்குலம்

ஜி. ஜி.: முதலாம் எதிரி உயரம்!என்ன இருக்கும்
